செண்பக விருக்ஷம் - चम्पक:, हेमपुष्पक:, केसरी न, चाम्पेय: पु

செண்பகப்பூ - चाम्पेयम् न

செத்தவன் - प्रेत:, मृत:, परासु:, प्रमीत:, प्राप्तपञ्चत्व:, परेत:, प्रमीत:, संस्थित:

செதுக்க - क्रि तक्ष् 1 5 प, छिद् 7 प, कृत् 6 प, क्रि व्रश्च् 6 प

செதுக்கப்பட்ட - तक्षित, तष्ट, वृक्ण

செதுக்கப்பட்டது - त्वष्टं, तष्ट:, त्वष्ट:, तनूकृत:, तष्टं, तक्षितं, वृक्णं

செதுக்கப்பட்டவள் - तक्षिता, वृक्णा

செதுக்கப்பட்டவன் - तक्षित:, वृक्ण:

செதுக்கப்பட வேண்டும் - तक्षितव्यम्, तक्षणीयम्, व्रश्चितव्यम्, व्रष्टव्यम्, व्रश्चनीयम्, व्रश्च्यम्

செதுக்கப்படுகிறான் - तक्ष्यते, वृश्च्यते

செதுக்கிக் கொண்டு - तक्षन् पु, तक्षन्ती स्त्री, वृश्चन्, वृश्चती

செதுக்கிவிட்டு - तक्षित्वा, व्रश्चित्वा, विवृश्च्य

செதுக்கினது - त्वष्टं

செதுக்குகிறான் - व्रश्चू 6 प, वृश्चति, क्रि तक्ष् प, तक्षति, क्रि तक्ष्णोति, छिनत्ति, छिन्ते क्रि

செதுக்குதல் - तक्षणं, व्रश्चनं, तनूकरणं, कर्तनम्, क्षुरणम्, उल्लेखनं, घर्षणम्, छेद:, क्षतं, भेद:

செதுக்கும் உளி - तङ्क: पु, पट्टिश:

செதுக்குவதற்கு - तक्षितुं, व्रश्चितुम्, व्रष्टुम्

செந்சாந்து - सिन्दूरम्, सिन्दूरिका स्त्री

செந்தாமரை - रक्तोत्पलम्, कुमुदं, रक्तकमलं न, तामरसं न, रक्तसरोरुहम्, कोकनदं

செந்தேள் - अली, अलिन्, आली, आलिन्, द्रोण:, द्रूण:, वृश्चिक:, आलि:, द्रुण:

செந்நாய் - कोक:, वृक:, ईहामृग:

செந்நாய்க் கூட்டத்தால் விளைந்த அச்சம் - वृकभी:

செந்நாய்க் கூட்டம் - वृकगण:

செந்நாயிடம் அஞ்சினவன் - वृकभी:

செந்நெல் - भङ्ग:, मातुलानी

செந்நெல் விளையும் பூமி - भङ्ग्यम्, भागीनम्, शालेयम्

செப்டம்பர் - भाद्रपदाश्विनं

செப்பிடு வித்தை - इन्द्रजालं, प्रातिहार्यम्

செப்பிடு வித்தைக்காரன் - प्रातिहारिक:, शौभिक:, प्रातिहार: पु, प्रातिहारक:, मायाकार:, तान्त्रिक:

செப்பினாலான – औदुंवर वि

செப்பு - औदुंवरम्, ताम्रम् न, ताम्रकं, शुल्वम्, म्लेच्छमुखं, वरिष्टं, द्वयुष्टम्, उदुंवरं

செப்பு நாணயம் - पण:

செப்பு வேலை செய்பவன் - ताम्रकुट्टक:, शौल्बिक:, शौल्विक:

செப்புக் காசு அற்ற - वराटिका

செப்புக் காசு - पण:, कार्षिकं

செப்புத் தகடு - ताम्रपत्रं, ताम्रपट्टं, ताम्रपट:, ताम्रपट्ट:

செப்புப் பாத்திரம் - शिङ्घाणं, प्रघण:, प्रघाण:

செம்பஞ்சிக் குழம்பு - रक्तं, पत्राङ्गं

செம்படவன் - दाश:, मात्स्यिक:, शाकुलिक: पु, दास:, जालिक:, मत्स्याजीव:, मत्स्योपजीविन्, कैवर्त:, धीवर:, निषाद:

செம்படவனின் மகன் - दाशेर:, दासेर: पु

செம்படவ ஸ்த்ரீ - दाशा

செம்பரத்தம் பூ – ओड्रपुष्पं न, जपापुष्पम् न

செம்பரத்தை - जवा, काञ्चन:, नागकेसर:

செம்பு (தாமிரம்) - नेपालम् न, लोहितम्, कुप्यं, ताम्रम् न, लोहितक:, शुल्लम्, ताम्रकं, द्वयष्टवरिष्ठं, शुल्वं, शुल्बं न, म्लेच्छमुखं, उदुंवरं, औदुम्बरं

செம்பு முதலிய லோகங்களைப் பொன்னாக்கும் ரஸவாத வித்தை - रसवाद:

செம்பு பித்தளை வேலைக்காரன் - शौल्विक:

செம்புளிச்சை மரம் (தேவதாரு) - शक्रपादप:, पारिभद्रक:, भद्रदारु, द्रुकिलिमं, पीतदारु, पूतिदारु, पूतिकाष्ठं, देवदारु:

செம்பைச் செடி - शणपर्णी, असनपर्णी, शीतला, वातकी, वातक:, वातल:, शीतल:, वातकं, अपराजिता

செம்போத்து என்னும் பக்ஷி - भरद्वाज:, व्याघ्राट:

செம்மட்டி - उद्घातः पु, कूट: पु, कूटं न, कूटकं न

செம்மரம் - प्लीहशत्रु:, रोही न, दाडिमपुष्पक:, रोहिन्, रोहितक:

செம்மறி ஆட்டினுடையது - छागलं

செம்மறி ஆடு - छाग:, ऊर्णायु:, उरभ्र:, छगलक:, छगल:, प्रयुत्सु:, भेड:, भेडी स्त्री, भेड्र:

செம்மறிக்கடா - मेष:, उरभ्र:, उरण:, हुड:, हुण्ड:, अवि:, एडक:, मेढ्र:, ऊर्णायु:, मेठ:, मेहः, वृष्णि:, हुडु:, लोमश:, एड:

செம்மறியாட்டு மந்தை - अविकुलं, आविकम्, औरभ्रकं

செம்மறியாட்டு மயிர்க்கம்பளம் - मेषकंवल:, ऊर्णायु:

செம்மறியாட்டு ரோமம் - ऊर्णा स्त्री

செம்முருங்கை - गृञ्जनम्, प्रियालु:

செம்மெழுகு - यावक: पु, यावकम् न, लाक्षा स्त्री

செம்மைப் படுத்துதல் - परिष्कार:

செம்மையாக - सम्यक् अ

செம்மையாகச் செய்யப்படாத - अशोधित

செய் நன்றி கொன்றவன் - कृतघ्न:

செய்கிற - निर्वर्तक, विधायक, विधायिन्, व्यवसायिन्, कर, कार, कारक

செய்கிறதனைத்தையும் கண்காணிப்பவர் (ஸூர்யன், சந்த்ரன், யமன், ஐம்பூதங்கள் அவரவரது அந்தர்யாமி ஆகியோர்) – कर्मसाक्षिन् पु

செய்கிறவன் – कर्ता पु, प्रयोक्तृ पु, कारु:

செய்கிறான் - 'करोति' என்னும் இந்த வினைச் சொல் பல சொற்களுக்கு அடுத்து வந்து அவைகளை வெவ்வேறு பொருளில் வினைச் சொல்லாக மாற்ற எளிதில் பயன்படுகிறது. உதாரணமாக:- சாப்பிடுகிறான் என்னும் சொல்லுக்கு 'खादति' என்கிறோம். 'भोजनं' என்றால் உணவு எனப்பொருள். இத்துடன் 'करोति' என்னும் சொல் அடுத்து வந்தால் 'भोजनं करोति' சாப்பிடுகிறான் என்னும் வினைச் சொல்லின் பொருளைத் தருகிறது.

மேலும் சில உதாரணங்கள்: குளிக்கிறான்- स्नानं करोति தூங்குகிறான்- निद्रां करोति ஜபிக்கிறான் - जपं करोति கழுவுகிறான் - क्षालनं करोति

செய்கிறான் - क्रि कृ 8 उ, करोति, कुरुते, रच् 10 उ, रचयति, रचयते, क्रि कल 10 प आ, कलयति, कलयते, क्रि कृप् (कल्प) आ, कल्पते, क्रि आचर् प, आचरति, आरभते, उपलक्षयति क्रि, चरति, ग्रथ्नाति, ग्रन्थयति, ग्रन्थयते, ग्रथते क्रि, तक्षति, तक्ष्णोति क्रि

செய்கை - रचना, कलना, संविधानम् न, सम्प्रतिपत्ति: स्त्री, विहिति: स्त्री, वर्षणि: स्त्री, व्यवसाय:, व्यवहृति: स्त्री, व्रत:, व्रतम्, निषेवणं, निषेवा स्त्री, प्रतिपत्ति: स्त्री, प्रतिपादनं, प्रयोग:, प्रवृत्तम्, प्रारम्भ:, फलम्, विजृम्भितम् न, विधानम्, विधि: पु, कार्यक्रम:, कृति: स्त्री, क्रिया स्त्री, खम् न, कर्म, कर्मन् न, विधा

செய்கைக்கு வருந்த - क्रि अनुशुच् प, अनुतप् 4 आ

செய்கைக்கு வருந்துதல் - अनुशोकाकुल, अनुतापार्त, शोकार्त, विषण्ण, उद्विग्न

செய்கையில் முற்பட்ட - व्यापृत वि, व्यायत वि

செய்கையை உடைய - सकर्मक वि, सक्रिय वि

செய்கையைக் குறிப்பது - कार: पु

செய்த – कृत वि

செய்த காரியத்திற்கு நல்ல பயன் விரும்பிச் செய்யும் தானம் - फलदानं

செய்ததும் செய்யாததுமான - कृताकृत वि

செய்தபின் நல்லதாக விளங்குகிற - कृतशोभि वि

செய்தல் - उपपत्तिः, कर्मन् न, कल्पनं, कल्पना, करणं, विधानं, आचरणं, क्रमः, क्रिया, अनुष्ठानं, संपादनं, साधनं, प्रणयनम्, मापनम्, मापना, निर्वर्तनं, व्यापारः, चरितं, समाचरणं, प्रवृत्तिः, परिकल्पनं, परिकल्पना, कारिका, विधिः

செய்தவன் - प्रबन्धृ पु

செய்தற்கரிது - असुकरः

செய்தற்கெளிது - सुकरं

செய்தி - संदेशः, संदेशवाच् स्त्री, उदंतः, वृत्तांतः, वाचिकं, वार्ता, समाचारः, प्रवृत्तिः स्त्री, वृत्तं, संवादः, विषयः, विशेषः, जनवादः, जनश्रुति, लोकप्रवादः, किंवदंती, शासनं, दूत्यम् न, आख्यानं, प्रिया स्त्री, श्रुतिः, सन्दिष्टम्, सूचना स्त्री

செய்தி அறிக்கை - ज्ञापकं पत्रं

செய்தி அனுப்ப - क्रि सन्दिश् 6 प

செய்தி அனுப்புகிறான் - क्रि सन्दिश् 6 प, सन्दिशति

செய்தி அனுப்புதல் - दौत्यम्, प्रतिशास्तिः स्त्री

செய்தி எடுத்துச் செல்பவர் - दूतः, वैवधिकः, संदेशहरः, वार्ताहरः, प्रेष्यः, वार्तायनः, ख्यायकः, आख्यायकः, निसृष्टार्थः, प्रतिकषः, दूतकः

செய்தி கொண்டு ஓடுபவன் - जङ्घालः पु

செய்தி கொணர்கிற – जाङ्घिक वि

செய்தி சம்பந்தமான - वार्तिक वि

செய்தி சொல்கிறான் - कथयति क्रि, कीर्तयति, कीर्तयते क्रि

செய்தி சொல்பவன் - चक्रिन् पु, सूचकः पु, दूतः पु

செய்தி சொல்பவனாக அமர்த்தப் பட்ட - प्रणिहित

செய்தி தெரிவித்தல் - ख्यापनं, निवेदनं, विघोषणा

செய்தி தெரிவிப்பவர் - आख्यायकः, संदेशहरः

செய்தி பரப்புபவன் - कुशीलवः पु

செய்திச் சுருள் - दीर्घपत्रं, दीर्घपटः

செய்தித்தாள் வெளியிடுபவர் - वृत्तपत्र प्रकाशकः

செய்திப் பத்திரிக்கை - वार्तापत्रं, वृत्तपत्रं, समाचारपत्रं, समाचारपत्रिका

செய்தியாளர் - वार्तिकः

செய்தியைத் தெரிவிக்க விருப்ப மில்லாத - प्रवृत्तिपराङ्मुख वि

செய்து காட்ட – क्रि साध्, सिध् (साधयति), निर्दिश् 6 प, (प्रमाणयति), प्रदृश्, प्रतिपद्, उपपद्

செய்து காட்டுதல் - साधनं, सिध्दि स्त्री, उपपत्ति स्त्री, प्रतिपादनं

செய்து காட்டுபவன் - निर्देशकः, प्रतिपादकः, प्रदर्शकः

செய்து கொண்டு - कुर्वन्, कुर्वती

செய்து தருகிறான் - साधयति क्रि

செய்து பழகுதல் - अभ्यासः पु

செய்து முடிக்க இயலாத - असाध्य, असाधनीय, दुरन्वय

செய்து முடிக்கப்பட்ட - साधयितव्य वि

செய்து முடிக்கிறான் - क्रि कृप् 10 प, आ, कृपयति, कृपयते, क्रि पार् 10 प, आ, पारयति, पारयते, क्रि सिध् 4 प, सिध्यति, क्रि क्लृप् आ, कल्पते, घटयति क्रि, साधयति क्रि, तनोति, तनुते, तरति क्रि, शक्नोति क्रि

செய்து முடிக்கும் சக்தி உள்ளவனாக இருக்கிறான் - क्रि शक् 5 प, शक्नोति

செய்து முடித்தல் - आराधनम् न, समापनम्, उपस्थितिः स्त्री, अनुष्ठानम्, निष्पत्तिः

செய்து வருகிற - चीर्ण वि

செய்து விட்டு - कृत्वा

செய்நன்றி – कृतज्ञता स्त्री

செய்நன்றி உணராத - अकृतज्ञ वि

செய்நன்றி உள்ள மனிதன் - कृतज्ञः

செய்நன்றி மிக்க - कृतज्ञ वि

செய்நன்றியுடையது (நாய்) - कृतज्ञः

செய்பவள் - कर्त्री

செய்பவன் - कर:, कर्ता, कर्त्री स्त्री, कर्तृ, रचन्, कारक:, संपातक:, निर्वर्तक:, निर्वाहक:, अनुष्ठातृ, धाता

செய்பவன், செயல், செய்யப்படுவது என்பது போன்ற ஒரு முக்கோணமுள்ளது - त्रिपुटी स्त्री

செய்ய - क्रि वितन् 8 उ, विधा 3 उ, वृत् आ, वे उ, शील् प, सञ्चर प, प्रणी प, प्रतन् 8 उ, प्रतिपद् 4 आ, प्रवृत् आ, रच् 10 उ, राध् 4 5 प, विचर् प, अनुष्ठा उ, अभिसंस्कृ 8 उ, आचर् प, आचरति, आतन् 8 उ, आबन्ध् 9 प, आसेव् आ, आस्था उ, आहृ प, उपाकृ 8 उ, कल् 10 उ, कृ 8 उ, करोति, कुरुते, क्लृप् आ, चर् प, तन् 8 उ, तन्त्र् 10 उ, धा 3 उ, निनी प, निर्वप् प, निवृत् आ, प्रकृ 8 उ, प्रचर् प

செய்ய இயலாதது - अशक्यता, असाध्यता, असाध्यं, असंभव:

செய்ய முடிகிறவரை - यावच्छक्यं अ

செய்ய முடியாத - अशक्य, असाध्य, असंभव, अकरणीय, दुष्कर, उत्ताल

செய்ய முடியாதது - अशक्यता, असाध्यता, असाध्यं, असंभव:

செய்ய விருப்பம் – चिकीर्षा स्त्री

செய்ய விருப்பமுள்ள - चिकीर्षु वि

செய்ய விரும்பிய - चिकीर्षित वि, विधित्सित वि, चिकीर्षु वि

செய்ய வேண்டிய - आज्ञापक, आदेशक, नियोजक, विधायक, प्रचोदक, अविचार्य, अवश्यकर्तव्य, अनुपेक्ष्य, कर्तव्य, करणीय वि

செய்ய வேண்டிய முறைப்படி அமைந்த - धर्म्य वि

செய்ய வேண்டியது – कार्यम् न

செய்யக்கூடாதது - अकृत्यं

செய்யக்கூடிய - साध्य, शक्य, करणीय, संभाव्य, सुकर, उपपाद्य, कल्प वि

செய்யக்கூடிய தன்மை - साध्यता स्त्री

செய்யக்கூடிய தன்மையை அளவிடுவது - साध्यतावच्छेदकं न

செய்யக்கூடிய தன்மையை உடைய – साध्यवत् वि

செய்யக்கூடியது - साध्यं

செய்யத் தகாதது - कटु: न

செய்யத்தக்க – विधेय वि, साध्य, कर्तव्य वि, भाज् वि

செய்யத்தக்க காரியம் - केतनं

செய்யத்தக்க வேலையை ஆரம்பித்தல் - पराक्रम:

செய்யத்தக்கது - करणीयं, कर्तव्यं, कार्यं, आस्पदं, रचनीयं

செய்யத்தக்கதைச் செய்யாத - अनाचार

செய்யத்தகாத காரியம் – कौपीनम् न, व्यलिकं, कौलीनम् न

செய்யத்தகாத தீச்செயல் - महापापं

செய்யத்தகாதது - कौपीनं, अविहितं

செய்யத்தகுந்தது - आस्पदं

செய்யத்தூண்டுதல் - उत्तेजनम्

செய்யப் பெறாத – अकृत वि

செய்யப்பட்ட - कल्पित, क्लृप्त, चरित, चीर्ण, निर्वृत्त, परिकल्पित, प्रणीत, प्रतिपन्न, प्रवर्तित, प्रस्तुत, मय वि, रचित, वितत, विनिर्मित, विहित, आसेवित, विधेय, कृत, निर्मित

செய்யப்பட்ட உணவுப்பொருள் - संस्कृतं

செய்யப்பட்டது - प्रणीत:, कृतम्, विरचितं, रचितं, रचित:, कलित:, कलितं, विहितं, विरचित:, आपादितं, आचरितं, कृतका, सङ्कलितं

செய்யப்பட்டவள் - कृता

செய்யப்பட்டவன் - कृत:

செய்யப்படவேண்டும் - कर्तव्यम्, करणीयम्

செய்யப்படாதது - अकृत:

செய்யப்படுகிறான் - क्रियते

செய்யப்போகிற - करिष्यमाण वि

செய்யுட்களிலுள்ள வேறு வேறு பொருளைக் குறிக்கும் படி இருமுறை திருப்பிக் கூறுதல் - यमकम् न

செய்யும் விருப்பம் - विधित्सा स्त्री

செய்யுள் - उक्थम् न, पद्यम् न, श्लोक: पु, वृत्तं

செய்யுள் அடி - पदम् न, चरण: पु, चरणम् न, पाद:

செய்யுள் நடை - पद्यं

செய்யுள் பகுதி - पल्लवम् न

செய்யுள் புனைகிறான் - गुफति, गुम्फति क्रि, क्रि श्लोकते

செய்யுள் புனைதல் - गुम्फनम्

செய்யுள் புனையப்பட்ட - गुफित, गुम्फित

செய்யுள் வடிவான நூல் - पद्यं

செய்யுள் வரி - पाद:, चरण:, चरणं

செய்யுள்களின் கோர்வை - कुलकम् न

செய்யுளின் அடி, சீர் - छंदस् न, वृत्तं

செய்யுளின் ஒரு அடியைப் பூர்த்தி செய்தல் - पादपूरणम् न

செய்யுளின் ஒரு அடியைப் பூர்த்தி செய்வதில் வரும் சொற்கள் - तु, हि, च, स्म, ह, वै / अ

செய்யுளின் ஒரு பகுதி - उपभङ्ग:

செய்யுளின் ஒரு பகுதியைக் கொடுத்து அச்செய்யுளைப் பூர்த்தி செய்யச் சொல்லுதல் - समस्या

செய்யுளும் வசன நடையும் கலந்த நூல் - चम्पू:

செய்வகை அறியாத - किङ्कर्तव्यतामूढ वि, विलक्ष वि

செய்வகை அறியாமை - अप्रतिपत्ति: स्त्री

செய்வதற்கு - कर्तुं

செய்வதற்கெளிது - सुकर:, सुकरा

செய்வதறியாமல் திகைப்பவன் - विहस्त:

செய்விக்கத்தக்க – कारयितव्य वि

செய்விக்கப்பட்ட – कारित वि

செய்விஷம் - गर:, गरम्, गरणम्, गरल:, गरलम्, उपविष:, उपविषम्

செயப்படு பொருளை உடைய - सकर्मक वि

செயப்படுபொருள் குன்றிய - अकर्मक

செயல் - आचार:, कारक:, कारिका, कारकं, रचनं, करणं, भाव:, क्रिया, कृति: स्त्री, कर्मं न, चरितं न

செயல் - विचेष्टितम् न, अर्थ:, कृत्यं, प्रदर्शनम् न, कारि: स्त्री, कार्यम् न, उत्थानम् न, चेष्टा, उद्गति: स्त्री, उद्गम: पु, चरित्रम् न, चर्या स्त्री, उद्योग:, कर्मन् न, क्रम: पु, चरणं, कर्मा स्त्री, व्यापार:, चेष्टितं, आचरणम्, व्यवहार:, पणाया, रमति:, विधानं, वार्ता, व्यवसाय:

செயல் திட்டம் - युक्ति स्त्री, प्रयोग:, कार्यक्रम:, उपाय:, व्यवहार:, रीति:

செயல் திறமுள்ள – कर्मक्षम, कर्मण्य वि

செயல் திறன் – कार्यक्षमता स्त्री

செயல் தொடக்கம் - प्रतिपत्ति:

செயல் நிறுத்தம் - साति: स्त्री, अवसानं

செயல் நிறைவு பெற்ற – कृतार्थ वि

செயல் நிறைவு பெற்று விட்டு - सिधित्वा, सिद्ध्वा, प्रसिद्ध्य

செயல் நிறைவு பெற்றுக்கொண்டு - सिध्यन्, सिध्यन्ती

செயல் நிறைவு பெற, செயல் நிறைவு பெறுவதற்கு - सेध्दुं

செயல் நிறைவு பெறப்பட்ட - सिध्द

செயல் நிறைவு பெறப்பட்டது - सिध्दम्

செயல் நிறைவு பெறப்பட்டவள் - सिध्दा

செயல் நிறைவு பெறப்பட்டவன் - सिध्द:

செயல் நிறைவு பெறப்பட வேண்டும் - सेध्दव्यं, सेधनीयम्

செயல் நிறைவு பெறப்படுகிறான் -सिध्यते

செயல் நிறைவு பெறுகிறது - क्रि सिध्यति

செயல் நிறைவு பெறுதல் - सेधनं

செயல் நோக்கம் - हेतु:, अभिप्राय:, आशय:, अर्थ:, संकल्प:, उद्देश:, तात्पर्यं, चिकीर्षितं, इच्छा, आकूतं, आकांक्षा, कार्यं, मति स्त्री, बुध्दि स्त्री, धी:

செயல் புரிகிற உடலுறுப்பு (கை, கால், வாய், ஆசனவாய், ஜனன உறுப்பு) - कर्मेन्द्रियम् न

செயல் புரிகிறான் – क्रि शीलति, शीलयति – ते, क्रि चेष्टते

செயல் புரிபவன் - कर्तृ

செயல் புரிய ஆசை – चिकीर्षा स्त्री

செயல் புரியப்பட்ட - चेष्टित

செயல் பூர்த்தி - सिध्दि: स्त्री

செயல் முடித்தல் - निर्वर्तनम्, निवर्तनम्

செயல் முறை - कार्यक्रम:, उपचार:, कार्यविधि: पु

செயல் வீரனான - सकर्मक

செயல்பட முடியாத - अशक्य, असाध्य, असंभव, अकरणीय, दुष्कर

செயல்படல் - उपाय: पु

செயல்பாடுகளைத் தொகுத்தல் - संविधानम्

செயல்வீரன் - कर्मठ

செயலமைச்சர் - कर्मसचिव: पु

செயலற்ற - अशक्त, अप्रभाव, दुर्वल, निस्तेजस्, व्यर्थ, विफल, कार्यहीन वि

செயலற்ற நிலை - नष्टचेष्टता, स्तंभ:

செயலற்றதாய்ச் செய்யப்பட்டது - मोघीकृतं

செயலற்றது - ललाटिकं

செயலற்றவன் - क्लीवं

செயலற்றவனாக்குதல் - अभ्यवस्कन्दनं

செயலறச் செய்தல் - अभ्यासादनं

செயலாக்கக்கூடிய - कल्प

செயலாக்கம் - करणं, अनुष्ठानं, विधानं, निर्वाहः, आचरणं, निष्ठा

செயலால் உண்டான – जात वि

செயலாளர் - नियोगिन् पु, प्रतिनिधि:, कार्याधिकृत:, सचिव:

செயலாற்றப்பட்ட(து) - सिध्द

செயலாற்றப்படுகிறது - क्रि सिध्यति

செயலாற்றல் - शक्ति स्त्री, सामर्थ्यं, वैदग्ध्यं, बलं, प्रभाव:, वीर्यं, हस्तकौशलं, ऊर्ज:, सहस् न, ओजस् न, हस्तलाघवं, विभव:, विक्रम:, पराक्रम:, दाक्ष्यं, शौर्यं, कौशलं, चातुर्यं, पाटवं

செயலாற்றல் கொண்டதாக - सक्रिय वि, क्रियाशील वि

செயலாற்றல் மிக்க – कर्मण्य वि, दक्ष वि

செயலாற்றலற்ற - दुर्विदग्ध वि

செயலாற்றுகிற – सक्रिय वि

செயலாற்றுபவர் - प्रचालक: पु

செயலில் ஆர்வமுள்ளவன் - चिकीर्षु:

செயலில் ஆழ்ந்திருக்கிறான் - प्रघटते क्रि, क्रि घटते

செயலில் ஈடுபடாமை - जाड्यम्

செயலில் ஈடுபடுகிறான் - चेष्टते क्रि

செயலில் ஈடுபாடு - कार्यव्यस्त:

செயலில் சூரன் - कार्मुक:

செயலில் தீவிரமாக ஈடுபட உறுதிபூண்ட – दीक्षित वि

செயலில் பயன்படாத – अकर्मण्य वि

செயலில் பொறுப்புடன் முன் நிற்பவன் - धुरीण: पु

செயலிற்புகுந்தவன் - उद्युक्त:

செயலின் செய்முறை - पध्दति:, पध्दती

செயலின்மை - आलस्यं, अनुद्योग:, निर्व्यापारत्वं, कार्यद्वेष:, औदासीन्यं

செயலுக்குகந்த காலம் - वेला

செயற்குழு - कार्यसंपादिका सभा, नियुक्तजना:, समिति: स्त्री

செயற்கூட்டம் - कार्यकलाप: पु

செயற்கை - कृत्रिमम् न

செயற்கை உப்பு - वस्तकं, कृत्रिमलवणं

செயற்கை முறையில் வலியற்ற மரணம் - अनायासेन कृत्रिम मरणं, यातनाशून्य कृत्रिममृत्यु:

செயற்கைத் தலைமுடி - कृत्रिमकेशा: पु, वहुव

செயற்கையற்ற - अकृत्रिम, सहज, अनाहार्य

செயற்கையாக ஆக்கப்படாத - असंभृत, अकृत्रिम

செயற்கையாக நினைத்துச் செய்யப் பட்ட - कल्पित

செயற்கையான - कृत्रिम, कृतक, कल्पित, सव्याज, रचित, शिल्पनिर्मित

செயற்கையான மலை - क्रीडापर्वत: पु

செயற்படுத்துதல் - स्वीकार: पु

செயற்பாடு - अनुष्ठानम् न, कार्यम् न

செரிக்காத - अजीर्ण वि

செரிக்கிறான் - जीर्यति क्रि

செருக்கு - दुर्विलसितं न

செருக்குமிக்க - गर्वित वि, शौटीर

செருப்படை - सुवहा, गोधापदी

செருப்பல்லு என்னும் தான்யம் - भङ्गा, भंग, मातुलानी

செருப்பு - उपानह् स्त्री, पादुका, पादत्रं, हस्त्री, पादू:, अनुपदीना स्त्री, पादरक्षा, पादरक्ष: पु, प्राणिहिता स्त्री, वध्य: पु

செருப்பு தைப்பவன் - चर्मकारः, कारुः

செல் - प्रेहि

செல்கிற இயல்புள்ள - गत्वर वि

செல்கிறான் - क्रि अय् आ, अयते, क्रि हा 3 आ, हायते, जिहीते, जिहासते, क्रि चल् प, चलति, क्रि इ (इण्) प, एति, क्रि इङ्ग् उ, इङ्गति, इङ्गते, क्रि अटति, गच्छति, चरति, च्यवते, पतति, सेधति, याति, वाति, कलयति, कलयते, क्रामति, क्रमते, क्राम्यति, उपनमति

செல்பவள் - गामिनी, गन्त्री, गामी न

செல்பவன் - विशन् (त), अयन् (त), गत्वरः, यन्ता (ऋ), गच्छन् (त)

செல்ல - क्रि प्रया 2 प, प्रेष् उ, फल् 2 प, भ्रेष्-भ्लेष् उ, या 2 प, लुण्ठ् प, लुण्ट् प 10 उ, वञ्च् प, वल् आ, वल्ग् उ, विचल् प, वेल्लू प, व्रज् प, शद प, शील् 10 उ, श्यै आ, स्रु प, हा 3 आ, हिण्ड् आ, ह्रेष् आ, ह्वल् प, अपया 2 प, अपे (अप् + इ) 2 प, अभिपद् 4 आ, अय् आ, उद् + अय् प, उदयति, ऋ प, ऋच्छ् 6 प, ऋज् उ, चल् प, डौक् आ, तय् आ, द्रम् प, पट् प, पद् 4 आ

செல்ல அனுமதிக்கிறான் – त्यजति क्रि

செல்ல முடியாத இடம் - दुर्गः

செல்ல, செல்வதற்கு - गन्तुम्, यातुम्, एतुं, व्रजितुम्, सेध्दुम्, चलितुं, चरितुम्

செல்லத்தக்க - एष्य वि

செல்லத்தக்கது - गम्यं

செல்லப்பட்ட - गत, यात, इत, व्रजित, सिध्द, चलित, चरित

செல்லப்பட்டது - गतम्, यातम्, इतम्, व्रजितम्, सिध्दम्, चलितं, चरितम्

செல்லப்பட்டவள் - गता, याता, इता, व्रजिता, सिध्दा, चलिता, चरिता

செல்லப்பட் டவன் - गतः, यातः, इतः, व्रजितः, सिध्दः, चलितः, चरितः

செல்லப்பட வேண்டும் - गन्तव्यम्, गमनीयम्, यातव्यम्, यानीयम्, एतव्यम्, अयनीयम्, व्रजितव्यम्, व्रजनीयम्, सेधितव्यम्, सेधनीयम्, चलितव्यं, चलनीयं, चरितव्यम्, चरणीयम्

செல்லப்படுகிறான் - गम्यते, यायते, ईयते, व्रज्यते, सिध्यते, चल्यते, चर्यते

செல்லப் பிள்ளை - तातः

செல்லம் கொடுத்துக் கெடுக்க - क्रि अत्यंतं लल् 10, अत्यंतं छंदं अनुवृत् आ, अत्यंतं छंदं अनुरुध् 4 आ

செல்லம் கொடுத்துக் கெடுக்கப்பட்ட - अतिलालित, दुर्ललित, लालनात् दूषित

செல்லமாய் வளர்த்தல் - लालना

செல்லமான மனைவி – पुरोधिका स्त्री

செல்லமுடியாத - अगम्य, दुर्गम, दुरासद, दुष्प्राप, दुरारोह, गहन, विषमस्थ

செல்லாக்காசு - कूटकार्षापणः पु

செல்லாத - अप्रमाण, निष्प्रमाण, लघुप्रमाण

செல்லாதது - अयातं

செல்லாதவன் - अयातः

செல்லுகிற - सृत्वर वि, स्यन्दिन् वि, सर्पिन् वि, सारिम् वि, सृमर वि, गन्तृ वि, चर वि, प्रचल वि, प्रस्थ

செல்லுகிறது – क्रि चरति

செல்லுகிறான் – क्रि चञ्चति

செல்லுகை - सङ्क्रमः पु, सङ्क्रमणम् न

செல்லுதல் (நொண்டிக்கொண்டு) - खञ्जनं, द्रवः, अयनं

செல்லுதல் - चरित्रम्, स्कन्दनं न, गमनम् न, चलनं, अयनम् न, गमः, चरितम् न, चारः पु, द्रवः पु, प्रवहः, व्रजनम्, सर्पणम् न, मस्करः, यानं, विसरः, सर्पः, संसरणम्, सरणम्, सरकम्, उपगमः, उपगमनम्, पतः पु, क्रमः, गतिः स्त्री, प्रचरणम् न, प्रचारः, प्रपातः,

प्रवर्तनम्, प्रसरः, प्रसरणम् न, वीतिः स्त्री, सरः, सृतिः स्त्री, प्रयाणम्, सेधनम्, साधनं

செல்லும் நேரம் - प्रस्थान समयः पु

செல்லும்படி செய்தல் - यापनम् न, यापना स्त्री

செல்வ நிலை - व्युष्टिः स्त्री

செல்வக்கூட்டம் (குவியல்) - कोशः

செல்வச் செருக்கினால் வந்த கர்வம் - अभिमानः

செல்வச்சீமான் - इनः

செல்வச்சீமான் என்ற நினைப்புள்ளவனாக - धन्यंमन्य

செல்வச் செழிப்பு - ऐश्वर्यम् न, नन्दा स्त्री, समृध्दि, सधनता, धनवाहुल्यं, समृध्दिः

செல்வச் செறுக்கு - धनमदः

செல்வத்திற்கு ஏற்ற - सारतस् अ

செல்வத்தின் தேவதை - करीषिणी

செல்வத்தினால் பிரசித்தமானவன் - प्रतीतः, प्रथितः, ख्यातः, वित्तः, विज्ञातः, विश्रुतः

செல்வத்தைக் கொடுக்கிற - शम्भु वि

செல்வத்தை விரும்புகிற - भूतिकाम, भूष्णु वि

செல்வதற்கெளிது - सुगः, सुगमा

செல்வது – ईरणम् न

செல்வதேவதை - चला स्त्री, लक्ष्मी स्त्री, चञ्चला स्त्री, चपला स्त्री

செல்வந்தர் கூட்டம் - धनिगणः

செல்வந்தன் - अर्थिन् पु, सार्थः पु, इभ्यः, आढ्यः, धनी, धनिन्, धनपतिः

செல்வம் – ब्रह्मन् न, भाग्यम् न, भूतिः स्त्री, भूमन् पु, भोगः पु, लभसः, श्री स्त्री, स्वम् न, सातिः स्त्री, विभूतिः स्त्री, वेदनम्, वेदना स्त्री, वैभवं, शेवः, सत्वम्, समृध्दिः, सारः, सारम् न, स्वोवशीयम् न, वसु न, वित्तम् न, कोशः, कोषः पु, ग्रन्थः, द्युम्नम्, निधानं, नीतम्, पणः, परभागः पु, परिबर्हः, परिवर्हः पु, परिबृंहणम्, पृक्तम्, पृक्थम्, बुसम्, बषम् न, सत्रम्, स्तोमन् न, भगः, भवः, भोग्यम् न, रै पु, लक्ष्मीः स्त्री, वाजम् न, विधः, विधा स्त्री, वृध्दिः स्त्री, श्रवस् न, सम्पत्तिः स्त्री, स्वापतेयम् न, सम्पद्, सौभगम्, धनं, द्रव्यं, वसुः न, अर्थः, लक्ष्मिः, वित्तं, द्रविणं, संपद् स्त्री, श्रीः, स्वः, वसु न, हिरण्यं, विभवः, रूप्यं, पणः, संपत्तिः स्त्री, ऐश्वर्यं, रै स्त्री राः, भूतिः, रिक्थं, ऋक्थं, द्युम्नं, चञ्चला, साधनं, स्वापतेयं, समृद्धिः स्त्री, संपत्, पृक्थम्, शंबरम्, स्वम्, सम्भारः

செல்வம் கொண்ட - संपन्न

செல்வம் சார்ந்த - आर्थिक

செல்வம் மிகுந்த - आढ्य, समृध्द

செல்வம் வழங்குகிற - धन्य वि

செல்வமடைய - क्रि संपद् 4 आ

செல்வமற்றது - अलक्ष्मीः, निर्ऋतिः

செல்வமின்மை - व्यृध्दिः स्त्री

செல்வமுடைய - श्रीमत्, धनिन्, धनाढ्य, वित्तवत्, धनसंपन्न, वित्तसंपन्न, धनिक, समृध्द, संपन्न, धनेश्वर, बहुधन, धन्य वि

செல்வமுள்ள - धन, वित्त, द्रव्यवत्, धनिन्, धनशालिन्, वित्तशालिन्, सधन, महाधन, बहुधन, अर्थवत्, धनिक, समृध्द, धनाढ्य, विभव संपन्न, धनसमृध्द, श्रीमत्, लक्ष्मीवत्, धनेश्वर, लक्ष्मीश, संपन्नवत्, भाग्यवत् वि, वसुमत्, समृध्द, सार्थ, धनिक, श्रीमत्, अधिश्री, आढ्य वि, धनभाज् वि, लक्ष्मीवत् वि, वृध्दिमत् वि, सम्पन्न वि, सश्रीक वि, आर्थिक वि

செல்வமுள்ளவன் - लक्ष्मीवान्, लक्ष्मणः, श्रीलः, श्रीमान्, श्रीमत्

செல்வாக்கிற்குட்பட்ட – जित वि

செல்வாக்கிற்குட்படுத்துகிறான் –कलयति, कलयते क्रि

செல்வாக்கு - वलं, प्रभावः, शक्ति स्त्री, सामर्थ्यं, वशः, वशं, गुणः, प्रतापः, प्रतिष्ठ, गौरवं, वर्णः, अधिकारः,

उत्कर्षः, पदगौरवं, स्थानगौरवं, पदमाहात्म्यं, स्थानमाहात्म्यं, वाक्छक्तिः

செல்வாக்குள்ள - प्रभावक, प्रभावन वि

செலவழிக்க, செலவழிப்பதற்கு - व्ययितुं

செலவழிக்கப்பட்ட - व्ययित वि

செலவழிக்கப்பட்டவள் - व्ययिता

செலவழிக்கப்பட்டவன் - व्ययितः

செலவழிக்கப்படவேண்டும் - व्ययितव्यम्, व्ययनीयम्

செலவழிக்கப்படுகிறான் - व्यय्यते

செலவழிக்கிறான் - क्रि व्यय् प, आ, 10 प, आ, व्ययति, व्ययते, व्यययति, व्यययते, नयति, नयते, व्ययीकरोति क्रि

செலவழித்தல் - उत्सर्गः, व्ययः, विनियोगः, व्ययनं

செலவழித்துக்கொண்டு - व्ययन्, व्ययन्ती

செலவழித்துவிட்டு - व्ययित्वा, प्रव्ययी

செலவழிப்பட்டது - व्ययितं

செலவு - व्ययः, अपचयः, क्षयः, विनियोगः, विसर्गः, उत्सर्गः, त्यागः, अपचितिः, निःस्राव:

செலவு செய்ய - क्रि उत्सृज् 6 प, विसृज् 6 प, त्यज् प, परित्यज् प, व्यय् 10, (व्यययति), विनि-युज् 7 आ 10

செலவுக்காக அனுமதித்த தொகையை செலவு ஆகாததால் திருப்பிக் கட்டுதல் - व्ययप्रत्यायः पु

செலவுத்துகை (சார்ஜ்) - तारिकम्

செலவுத்தொகை - व्ययः, विसर्गः, उत्सर्गः, त्यागः, विनियोगः, धनत्यागः, अर्थोत्सर्गः

செலவை ஏற்றுக் கொள்ள - क्रि धनव्ययं स्वीकृ 8 उ, व्ययशोधनं, स्वीकृ 8 उ

செலுத்தப்படாத - अशोधित, अनिष्पन्न, अनिस्तीर्ण

செலுத்துகிறான் - चालयति क्रि

செலுத்துபவன் - यन्ता (ऋ)

செவ்வரத்தை - ओड्रपुष्पं, उड्डुपुष्पं, जपा

செவ்வல்லி - शोणं, कोकनदं

செவ்வலொத்தி மரம் - क्रमुकः, लाक्षाप्रसादनः, लाक्षप्रसादनः, पट्टिकाख्यः, पट्टिन्, पट्टिः, पट्टिका, पट्टी

செவ்வாய் - अङ्गारः, लोहिताङ्गः, असृज् न (असृक्), धरणीसुतः, कुजः, चरः, पृथ्वीजः, आरः, महीजः, महीपुत्रः, महीसूनुः, भूपुत्रः, भूसुतः, भूमिपुत्रः, भूमिसुतः, मङ्गलः, महीसुतः, शोणः, भूमिजः, भौमः, रक्ताङ्गः, वक्रः, अङ्गारकः

செவ்வாய்க்கிழமை - भौमदिनम्, भौमवारः, भौमवासरः, मङ्गलवारः, मङ्गलवासरः

செவ்வைப்படுத்தி இருக்கிற வழி (நல்ல வழி) - अतिपन्थाः, सपंथाः, सत्पथः

செவ்வையாகச் செய்யப்பட்ட பொருள் - संस्कृतं

செவ்வையாய் மனிதனைச் சுமக்கத் தக்க குதிரை - विनीतः, साधुवाहिनः

செவிக்கினிய - सुस्वर, मधुस्वन

செவிக்கு இன்பமில்லாத குரலை உடையவன் - अस्वरः, असौम्यस्वरः

செவிக்கு வெறுப்பு கொடுக்காதது - अपरुषं

செவிட்டு ஊமை - एडमूकः, कल्यः

செவிட்டு ஸ்த்ரீ - बधिरा

செவிட்டுத்தன்மை - वधिरता, एडता, श्रवणाक्षमता

செவிடன் - वधिरः, बन्धुरः, अकर्णः, एडः, एडकः, श्रोत्रविकलः, अनेडः

செவிடாக்கப்பட்ட - वधिरित वि

செவிடாக்கல் - वधिरीकरणं न

செவிடாய் - बधिरवत्, अश्रुतिपूर्व अ

செவிடான – एड वि, बधिर वि, बन्धुर वि, अकर्ण

செவிடு - बधिरं, बधिरिमन् पु, बाधिर्यम् न, वधिरः, श्रोत्रविकलः, अकर्णः, एड, एडः

செவிடுபடும்படியாக - बधिरवत्, अश्रुतिपूर्वं

செவிடும் ஊமையும் ஆனவன் - अनेडमूकः पु

செவிடும் ஊமையுமான – एडमूक वि, कल्य वि

செவிப்பறை - कर्णोदरं, कर्णदुंदुभिः

செவிப்பூரான் - कर्णजलौका:

செவியம் - चव्यम्, चविका, चविकं

செவிலித்தாய் - जाति:, उपमाता, धात्री स्त्री, उपमातृ स्त्री, स्तन्यदायिनी, आसन्नपरिचारिका, विमातृ स्त्री

செவுக்கணக்கில் எழுத - क्रि देयधनभागे लिख् 6 प

செவுங்கனார்ப்பூண்டு - श्रेयसी, रसा, एकाष्टीला, पापचेली, प्राचीना, वनतिक्तिका

செவுட்டாம் பாம்பு - कर्णजलूका, कर्णजलौका, शतपदी

செழித்தது - आयतं

செழிப்பான நிலம் - ऊर्वरा स्त्री

செழிப்பு - अभिवृध्दि: स्त्री, उदय: पु, उद्रेक: पु, भविकं न, सार:, सारम्, अभ्युदय:, भूति: स्त्री, संपद् स्त्री

செழிப்புள்ள - कुशलिन् वि, निकाम वि, सारवत् वि

செழுமை - उद्वर्तनम् न, ऋध्दि: स्त्री, नन्दा स्त्री, कल्याणम् न, कौशलम् न, कौशल्यम् न

செழுமையடைந்த – कुशल वि

செழுமையாக வளர - क्रि संजन् 4 आ, संभू प

செறுகம்புல் - कर्कश:, कांपिल्य:, गौतमी, रेचनी, रोचनी, चन्द्र:, रक्ताङ्ग:, रक्ताङ्ग रोचनी

சென்ற - अपर वि, इङ्गित वि, गत वि, चरित वि, चलित वि, निवृत्त वि, आपन्न वि, उपगत वि, क्रान्त वि, प्रक्रान्त वि, प्रचरित वि, प्रतीत वि, भूत वि, यात वि, विगत वि, वीत वि, वृत्त वि, श्यान वि, संवृत्त वि, अतीत, स्कन्न वि, स्रुत वि

சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு - परारि अ, अत्रवस् अ

சென்ற இரவு - गतरात्रि:, गतायांरात्रौ

சென்ற தினம் - पूर्वेद्यु: अ, ह्य:

சென்ற வருடம் - गतसंवत्सर:, परुत् अ, अतीत संवत्सर:

சென்றகாலத்திய - पूर्वकाल, पूर्वकालिक, पूर्वकालीन

சென்றடைகிறான் - क्रि व्रजति, संपद्यते, अभ्युपैति, अभियाति, ढौकते क्रि

சென்றதடம் - सीता

சென்றது - यातं, गतं, सृतं, अतीत:

சென்றவள் - गता, याता

சென்றவன் - यात:, प्रयात:, गत:, अक्त:

சென்றவனான - लिङ्गित

சென்று அடைகிறான் – अवाप्नोति क्रि, अश्नुते क्रि (क्रम्) क्रामति क्रि, क्रमते, क्राम्यति क्रि, गच्छति क्रि

சென்று அடைதல் - अपीति: स्त्री, आप्ति: स्त्री, अप्यय: पु

சென்று கொண்டிருக்கிறான் - चलति क्रि

சென்றுகொண்டு - गच्छन् पु, गच्छन्ती स्त्री, यान् पु, यान्ती, याती स्त्री, एष्यन्, एष्यन्ती, व्रजन्, व्रजन्ती, सेधन्, सेधन्ती, चलन्, चलन्ती, चरन्, चरन्ती

சென்று விட்டு – गत्वा, संगत्य, आगम्य, यात्वा, प्रयाय, इत्वा, प्रेत्य, व्रजित्वा, परिव्रज्य, सेधित्वा, सिधित्वा, प्रतिषिध्य, चलित्वा, प्रचल्य

சென்று விட்டு - चरित्वा, सञ्चर्य

சென்று விட - क्रि प्रस्था आ, प्रया 2 प, वि-निर्-गम् प, अपक्रम् उ 4 प, अपया, अपइ 2 प, अपगम् , अपसृ – सृप्

சென்று விடுதல் - अपक्रम:, व्यपगम:

சென்றுபிடிக்கப்பட்ட – आप्त वि

சென்றுவிட்ட - व्यपगत, व्यपेत

சென்றுவிடு - क्रि अपेहि, अपसर, अपयाहि

சென்னை – चेन्नपुरी स्त्री

செஸ் காய் - शार:, शारि:

செஸ் பலகை - अष्टापदं, शारिफलं

செஸ் விளையாட்டு - चतुरंगं

சேகரம் (கூட்டம்) - निवह: पु

சேகரிக்கிறான் - क्रि चि 5 9 आ, चिनोति, चिनुते, स्कन्धयति, स्कन्धयते

சேகரிக்குமிடம் - आधार: पु

சேகரித்தல் - सङ्ग्रह: पु, सञ्चय: पु, अवचय:

சேகரிப்பவன் - आर्जक:

சேங்கோட்டைச் செடி - भल्लातः पु, भल्लातकः पु, भल्लातकम् न

சேடி – सखी स्त्री

சேணம் - पर्याणं, पल्ययनं, पर्ययणं

சேணியர் தரி - तरिः

சேணியன் - कुविन्दः, कारुः, कौलिकः, तन्तुवायः, पटकारः

சேணியன் கருவி - कृविः

சேதப்படத்தக்க - भेद्य, धृष्य, वेध्य

சேதப்படாத – अक्षत वि

சேதப்படுத்தப்பட்ட - कुण्ठ, कुण्ठित वि

சேதம் - हतिः, क्षितिः स्त्री

சேதம் அடைந்த - छिन्न वि

சேதம் அடையச் செய்கிறான் - ग्रसते क्रि

சேதம் செய்யப்பட்ட - खण्डित वि

சேதம் விளைவிக்கிறான் – क्षिपति, क्षिपते क्रि

சேதம் விளைவித்தல் - कृतिः स्त्री

சேதமடைதல் - च्यवनम् न

சேதமாக்குகிறான் – छिनत्ति, छिन्ते क्रि

சேதமில்லாத - अनुपघातः

சேதனவஸ்த்து - चिन्मयं

சேதாமரம் - वीरवृक्षः

சேதாரம் - अपचयः, अपचितिः स्त्री, अवसादः पु

சேதி தேசம் - चेदिः

சேதி ராஜன் - चेदिः

சேதிதேசத்தரசன் (சிசுபாலன்) - चैद्यः, चेदिभूपः

சேபடித்திருடன் - चिल्लभः पु

சேம்பு - मिसिः, श्यामकः, तिक्तकः, कर्चूः स्त्री, कन्दः

சேமக்கலம் - घनं, कांस्यं

சேமிக்கத்தகுந்த - चेय

சேமிக்கப்பட்ட - चित वि

சேமிக்கிறான் - क्रि संयच्छते, उपचिनोति, संगृह्णाति

சேமித்த - अर्जितं न

சேமித்தல் - क्षेमं, चयनम् न

சேமித்து பதுக்கி வைக்கப்பட்ட - चित वि

சேமித்து வைக்கப்பட்ட பொருள் - संचयः, निचयः, निवहः, पुंजः, राशिः, गणः, संधः, संग्रहः, निधिः

சேமித்துக் கொணர்கிறான் - क्रि समाहरति

சேமிப்பு - रक्षणं न, सङ्ग्रहः पु

சேர்க்க - क्रि प्रणिधा 2 उ, युज् 7 उ, संयुज् 7 उ 10, सङ्घट्ट आ, सन्धा 3 उ, संमिश्र् 10, समाधा 3 उ, समृ प, (णिच्), एकीकृ 8 उ, सिव् 4 प, अनुवन्ध् 9 प, संकृ 6 प, अभिव्याप् 5 प, अभ्यन्तरीकृ 8 उ, आयुज् 7 उ, आसञ्ज् प, उपसृज् 6 प, घट् 10 उ, नियुज् 7 आ, प्रग्रह् 9 उ

சேர்க்கத்தக்க - सन्धेय वि, चेय वि

சேர்க்கப்பட்ட - सङ्कलित, समस्त, आयुक्त, सन्धानित, सन्धित, सृष्ट, अवसक्त, आयत, प्रयुत, प्रोत, उपस्कृत, नध्द, नियुक्त, संलग्न, अवान्तर, व्यासक्त, संहत, सञ्चित, अनुसंबध्द

சேர்க்கப்பட்டது - ग्रन्थितः, दृब्धं, संयोजितं, घटितम् वि, योजितः, सन्दितं, आपादितं

சேர்க்கப்பட்டவன் - योजितः

சேர்க்கப்பட்டவை - कायः पु, कायम् न

சேர்க்கிற – संप्रयोगिन् वि

சேர்க்கிறான் (இணைக்க) - क्रि यु – 2 – प यौति

சேர்க்கிறான் - योजनं करोति क्रि, चिनोति, चिनुते क्रि

சேர்க்கை - संवलनम् न, संश्लेषः पु, समवायः पु, संसृष्टत्वम् स्त्री, संश्लेषणम् न, संश्लेषणा स्त्री, संसृष्टिः स्त्री, संसक्तिः स्त्री, संसर्गः पु, संसृष्टता स्त्री, संस्पर्शः पु, संहतिः स्त्री, संहननम्, संहिता स्त्री, सक्तिः स्त्री, सङ्क लः पु, सङ्कलनम् न, सङ्करः पु, सङ्क्रमणम्, समभिव्याहारः पु, सन्नियोगः पु, सन्निवेशः पु, समन्वयः पु, सङ्क्रमः, सङ्क्रान्तिः स्त्री, सङ्गः पु, सङ्गतिः स्त्री, सङ्गमः पु, सङ्गमनम् न, सङ्घटना, सङ्घट्टः पु, सङ्घट्टनम् न, सङ्घट्टना, सङ्घातः पु, सन्दर्भः पु, सन्धा स्त्री, सन्धिः पु, सन्ध्या स्त्री, सन्निधानम्, सन्निधिः पु, सन्निपातः पु, संयोजनम्, संपर्कः, संयुगः, संयोगः, समागमः, समाधिः, सहत्वम्, समायोगः, समावेशः, समावेशनं, समासः, समासक्तिः, समासङ्गः, समाहारः, समासञ्जनम्, समुचयः, समुपगमः, सम्भूतिः स्त्री, सम्प्रयोगः, संवन्धः, सम्भेदः, सहचारः, सहता, साङ्कर्यम्, साहचर्यम्, साहित्यम्, साह्यम् न, योजनं, युक्तिः स्त्री, युतकम्,

यूतिः स्त्री, योगः पु, योजना स्त्री, ओघः, उत्सङ्गः, उपचयः, एकीभावः, अन्वयः, अनुयोगः, आश्रयः, कुलकम् न, गणः पु, गन्धः पु, गोष्ठिः, गोष्ठी स्त्री, ग्रामः पु, घनः, घटनं, जालकम्, निचयः, निचायः, नियोगः, निषङ्गः, इम्बरः, ततिः स्त्री, धारा स्त्री,

मेलः, मेलनम्, मेलकः, मेल्कं, लयः पु, श्लिष्टिः स्त्री, श्लेषः, परिमिलनम् न, परिष्वङ्गः पु, परिष्वञ्जनम् न, परिस्वञ्जनम्, पूगः, पृक्तिः स्त्री, प्रतियोगः, प्रतिसन्धिः पु, प्रतीवापः, प्रसक्तिः स्त्री, प्रसन्धानम् न, पर्यायः, पर्व न, मैथुनं

சேர்க்கைக்கு ஆவலான – संगमोत्सुक वि

சேர்க்கையின்மை - अयोगः पु

சேர்க்கையினால் - योगतः अ

சேர்க்கையுள்ள - संसर्गिन् वि, सङ्गिन् वि, समवायिन्, सम्बन्धिन्

சேர்க்கையை உடைய – संयोगिन् वि

சேர்கிறது - क्रि प्रपद्यते

சேர்த்த – संहित वि

சேர்த்தல் - योजनं, आगमः, उपग्रहः, उपलब्धिः स्त्री, उपसंग्रहः, सञ्चयः, उपसंग्रहणम् न, उपसंधानं, प्रसञ्जनं, सन्धानम्, संयोजनम्, समाधा स्त्री, समाधानम् न, समासञ्जनं, संधिः, श्लेषः, संयोगः, संसर्गः, संश्लेषः, संघातः, संगमः, संसक्तिः, सङ्ग्रहः, संमेलनं, परिगणनं, परिसंख्या, संकलनं, आहारः, आहृतिः, संक्षेपणं, समाहारः, चितिः, योगः, नियोजनं, प्रतिसंधानं, समायोग, समुदयः

சேர்த்து - मिलित्वा

சேர்த்து சமைத்த - अवपन्न वि

சேர்த்து நெசவிடப்பட்ட - अनुस्यूत वि

சேர்த்து நெய்கிறான் - क्रि गुफति, गुम्फति

சேர்த்து வைக்கப்பட்ட - संस्थित, संहित

சேர்த்து வைக்கிறான் - क्रि सन्निददाति, सङ्घटयति क्रि

சேர்த்து வைத்தல் - समसनं, घटनं

சேர்த்து வைப்பவன் – योक्ता (ऋ)

சேர்த்துக்கட்ட - क्रि संयुज् 7 उ 10, संश्लिष्, संधा 3 उ, (योत्रयति)

சேர்த்துக் கட்டுகிறான் - क्रि ग्रथते, ग्रथ्नाति, ग्रथयति, ग्रन्थति, ग्रन्थयति क्रि, ग्रन्थयते , ग्रथते क्रि

சேர்த்துக் கட்டுதல் - उपनहनं न, उपनाहः पु, ग्रन्थः

சேர்த்துக் கொண்டு வருதல் - संहारः

சேர்த்துக் கொள்ள - क्रि अनुषज् प

சேர்த்துக் கொள்ளத்தகுந்தவன் - गणेयः

சேர்தல் - संसृष्टिः, संधानम्, आगमः पु

சேர்ந்த - संयुज् वि, संयुत वि, संलग्न, संयुक्त, संसृष्ट, संश्लिष्ट, संसक्त, संहत, सङ्क्रान्त, सङ्गत, समन्वित, सजुष्, सजस, समायुक्त, संघटित, समासक्त, समूढ, संपृक्त, युक्त, युत, शुक्त, श्लिष्ट, संभूत, खचित, गत

சேர்ந்தது - युतकं, युक्तं, संयुक्तं, आसादितं, उपाहितं, उपेतं, समुपेतं, करंबः, युतं, संवध्दः, सहितं

சேர்ந்தருந்துதல் - सपीतिः

சேர்ந்தவள் - समेता, उपेता, सहिता, मिलिता, युता, युक्ता

சேர்ந்தவன் - युतः, श्रितः, अलसः, मिलितः, संयुक्तः, उपेतः, सहितः, योगी न, समवेतः, संपन्नः

சேர்ந்தார் போலிருப்பது - अपदान्तरम्, संसक्तं, अव्यवहितम्

சேர்ந்திருக்க - क्रि अन्तर्भू प

சேர்ந்திருத்தல் - साकल्यं

சேர்ந்திருப்பது - अनुबंधः, उपाहितभागः, परिशिष्टं, शेषसंग्रहः

சேர்ந்து - सहितं, सार्धम्, साकम्, सत्रा, समम्, सह अ, एकत्र अ, सहैव वि

சேர்ந்து இருக்கிறான் - क्रि ली 9 प, लिनाति

சேர்ந்து உண்ணுதல் - सहभोजनं, सग्धिः स्त्री, जग्धि स्त्री, सजग्धिः पु

சேர்ந்து குடித்தல் - सहपानं, संपीती स्त्री, तुल्यपानं, सपीतिः

சேர்ந்து சாப்பிடத் தகுந்தவன் - पाङ्क्तेयः पु

சேர்ந்து சுமந்த - समूढ

சேர்ந்து செல்வது - सहगमनं

சேர்ந்து நிற்கிற - संस्थित

சேர்ந்து மரித்தவள் - अनुमृतः

சேர்ந்து வசித்தல் - संवासः

சேர்ந்து வருந்துவது - अनुशोचनं न

சேர்ந்து வளர்ந்த - संरूढ

சேர்ந்துள்ள – उपेत वि

சேர்ந்தே தோன்றிய - अयुतसिध्द वि

சேர்ப்பவன் - अर्जकः, युक् (ज), युङ् (ज), योक्तृ पु

சேர்ப்பித்தல் - दायः पु

சேர்பவன் - मिलन् (त)

சேர - क्रि यु 2 प, युज् 7 उ, संसृज् 6 प, संहन् 2 प, सङ्गम् आ, संधा 3 उ, समृ प, अन्वि 2 प, अभिषञ्ज् प, आश्रि उ, पृच्छ् 2 आ 7 प

சேர ஆவல் - संगमोत्सुक वि

சேர நாட்டான் - चेर:

சேர ராஜன் - चेर:, चेरभूप:

சேரத்தக்கது - योज्यं

சேரதேசம் - चेर:

சேராங்கொட்டை மரம் - भल्लातकी, अरुष्कर:, पावक:, अग्निमुखी, वीरवृक्ष:

சேராத - अयुतम् वि

சேராதது - अघटितं, अघटित:, असङ्गति: स्त्री

சேராமரம் - वीरवृक्ष:, अरुष्कर:, अग्निमुखी, भल्लतकी

சேரி - ग्रामान्त:

சேருகிறான் – कलयति, कलयते क्रि

சேருதல் - सन्धि:, श्लेष:, आसङ्ग: पु, उपावर्तनम् न, संमेलनम् न, संगम: पु, संसर्जनम् न

சேலை - चीरिका, चीन:, सुचेलक:

சேலைத்தலைப்பு - युतकं

சேவகன் - अग्रेसरिक:, अनुयोज्य:, अनुचारक:, अनुचर:

சேவகி - अनुचारिका, अनुचरी, अनुचरा

சேவல் - नियोद्धृ पु, निशावेदिन् पु, कालज्ञ: पु, भास: पु, विष्किर:, पुच्छिन् पु, पुष्टिवर्धन:, बोधि: पु, शिखण्डिन्, कलाविक:, कृकवाकु:, उषाकल:, ताम्रचूड:, कुक्कुट:, शिखिन्, नखायुध:

சேவல் சண்டை - प्राणिद्यूतं, ताम्रचूडयुध्दं, समाह्वय:

சேவல் பந்தயம் - समाह्वय:

சேவலின் கொண்டை – चूडा, चूलिका स्त्री

சேவற் கொடியோன் (முருகன்) - कुक्कुटध्वज:

சேவிக்க - क्रि भज् उ, अन्वास् 2 आ, पर्युपास् 2 आ

சேவுகம் பண்ணுதல் - सेवा, श्ववृत्ति:

சேவுகன் - सेवक:, अर्थी, अर्थिन्, अनुजीवी, अनुजीविन्

சேவுகனார் பூண்டு - प्राचीना, श्रेयसी, वनतिक्तिका, पापचेली, रसा, एकाष्ठीला, स्थापनी

சேவை செய்யப்பட வேண்டும் - सेवितव्यम्, सेवनीयम्

சேவை - परिचर्या, परिचार:, सपर्या

சேவை செய்கிறான் - क्रि वृ 9 आ, वृणीते, क्रि 5 प आ, वृणोत्ति, वृणुते, क्रि 10 प आ, वारयति, वारयते, क्रि सेव् आ, सेवते

சேவை செய்தல் - सेवनम्

சேவை செய்து கொண்டு - सेवयन्, सेवयन्ती

சேவை செய்து விட்டு - सेवित्वा

சேவை செய்பவன் - परिचारक:, परिचारिक:, सेवक:

சேவை செய்ய, சேவை செய்வதற்கு - सेवितुम्

சேவை செய்யப்பட்ட - सेवित

சேவை செய்யப்பட்டது - सेवितम्

சேவை செய்யப்பட்டவள் - सेविता

சேவை செய்யப்பட்டவன் - सेवित:

சேவை செய்யப்படுகிறான் - सेव्यते

சேவை புரிகிறான் - क्रि सेवते

சேவை புரிதல் - सेवनम्, सेवा

சேவை புரியத்தக்க - सेव्य

சேற்றில் முளைத்தது (தாமரை) - पङ्कजं

சேற்றில் வசிக்கிற – पङ्केशय वि

சேற்று பூமி - पङ्किल:, सकर्दम:, सपङ्क:, समल:, कलुष:, पङ्कक्लिन्न:, पङ्कदूषित: पु

சேற்று மடு - पंकिलजलं, पंकगुल्म:, पल्वलं, पंकजलाशय:, पल्वल: पु

சேற்று மயமான நிலம் - सजंबाल:, निषद्वर:

சேற்றுப்புண் - विपादिका, पादस्फोट:, क्षतं

சேறாக - कच्छ, अनूप

சேறான - सपंक, समल, कलुष, पंकक्लिन्न, पंकदूषित, कार्दम, सकर्दम, पंकिल

சேறான நிலம் - पंकिल:

சேறானது - पङ्किलं

சேறு - पंक:, जंबाल:, कर्दम:, पङ्कं, कीर्ति:, दम:, निषद्वर:, शाद:, द्राप:, आविल वि, कच्छ: पु, कच्छम् न, करंभ: पु, कलुषम् न, नीवर: पु, चिकिल:, जम्वालम्

சேறு அல்லாத - अपिच्छिल

சேறு நிறைந்த – पङ्किल वि

சேறும் சகதியுமாக - पङ्कमया:

சேனா வீரர்களின் சிங்கத்வனி - सिंहनाद:

சேனை - पताकिनी स्त्री, वध्रतन्त्रम् न, पृत् स्त्री, पृतना स्त्री, बलम् न, चमू: स्त्री, वरूथिनी स्त्री, (स्कन्ध: + अवार:), सैन्य:, वाहिनी स्त्री, व्यूह:, साधनं, सैन्यम्, अनीकं, सेना स्त्री, ध्वजिनी, अनीकिनी, चक्रम्, कटक:, अनीक:, वरूथ:, सैनिक:, उत्थानं, गुल्म

சேனை அதிகாரி - महामात्र:, प्रधानं

சேனை அதிபதி - सेनानी:, वाहिनी पति:

சேனை அமைப்பு - व्यूहम्

1) குறுக்காக வைத்தல் - वलम्

2) ஒன்றன் பின் ஒன்றாக வைத்தல்- भेदम्

3) வட்டமாக வைத்தல்- मण्डलम्

4)வேறாக வைத்தல்- असंहतम् न

சேனை இருக்குமிடம் - निवेश:, शिविरम्

சேனை கலகலத்தது - समुत्पिञ्ज:, पिंजल:

சேனை புறப்படல் - प्रचक्रम्, चलितम्

சேனை முகம் - सेनामुखं, सेनाग्रं, अग्रानीकं

சேனையின் முன் அணி - सेनामुखं

சேனையின் முன் பகுதி வீரர்கள் - नासीरम्

சேனையுடன் பரவுதல் - प्रसरणम्, आसार:

சேனையுள்ள - बलवत् पु

சேனையை ஒழுங்குபடுத்தல் - व्यूहनं

சேனையைக்காப்பவர் - सेनारक्षक:, सैनिक:

சேனையைச் சார்ந்த – सैनिक वि

சேனையைச் சுற்றிக்காப்பவர் - परिचर:, परिधिस्थ:

சேனையைத் தயாராக்குதல் - सर्वाभिसार:, सर्वौघ:, सर्वसन्नहनं

சேனையோடு எதிரியை நோக்கிச் செல்லுதல் - अभिषेणनम्, अभिक्रम:

சேனை வ்யூஹத்திலிருந்து சற்று தூரமாக நிறுத்தப்பட்டிருக்கும் சேனை - सैन्यपृष्ठ:, प्रतिग्रह:

சேனை வ்யூஹத்திற்குப் பின் இருக்கும் சேனை - प्रत्यासार:, व्यूहपार्ष्णि:

சேனை வகுப்பு - वलविन्यास:, व्यूह:

சேனை வீரன் - योध:

சேனை வெள்ளம் - खर्व न

சேனைக் காவல் - सज्जनं, उपरक्षणम्

சேனைக் கிழங்கு - समष्ठिला

சேனைக் கூட்டம் - वलौघ:

சேனைகளை ஒழுங்குபடுத்த - व्यूह प क्रि

சேனைத் தலைவன் - चमूनाथ:, चमूप:, चमूपति:, साङ्ग्रामिक:, सेनापति:, बलाध्यक्ष:, यूथनाथ:, दंडनायक:, सेनानी, सेनाध्यक्ष:, नायक:, वाहिनीपति: पु

சேனைப்பகுதி - अनीकिनी, दल:, दलम्, गुल्मं

சேனையில் ஆயிரக்கணக்கில் குதிரை உள்ளவர் - साहस्र:, साहस्रिन्

சேனையில் குழப்பம் - समुत्पिंज:, पिंजल:, अत्यंतमाकुलं

சேனையிலிருப்பவன் - सैन्य:, सैनिक:

சேனையின்பின் காவற்படை - सन्नय: पु, समुदय:, सर्जनम् न

சேனையின் பின்பக்கம் - प्रतिसर: पु

சேஷ்டை - क्रीडा, चेष्टा, भाव:, चापलं, लीला, छंद:, छंदस् न

சேஷ பூதன் - शेषी न

சேஷ லோகம் - अहिलोक:

சேஷபூதனான பகவான் - शेष:

சேஷம் (உண்ட மீதி) - उच्छिष्टम्, भुक्तावशेषम्, भुक्तावशेष:, उच्छिष्टान्नम्, शेषान्नम्

சேஷம் (மீதி) - शेष:, शेषं, उद्वर्त:

சேஷன் - धरण:

சேஷாவதாரம் - पतञ्जलि:

சைக்கிள் - द्विचक्रिका स्त्री

சைகை (நடிப்பு) - अभिनय:, व्यञ्जक:

சைகை - चेष्ठा, व्यापार:, इंगितं, भाव:, अभिनय:, विलास:, विभ्रम:, अङ्गविक्षेप:, हाव:, हस्तादिचालनं, संज्ञा, संकेत:

சைகை காட்ட - क्रि अंगानि विक्षिप् 6 प, संचल्, अभिनी प,

சைகை காட்டுதல் - अभिनय:, अंगविक्षेप:, चेष्ठा, हाव:, संकेतसूचनं, सूचना, अंगहारः

சைந்தவ உப்பு - सैंधव:, सितशिवं, शीतशिवं, माणिवंधं, माणिमंधं

சைபர் - शून्यं, खं, विंदु:

சைவ ஆகமம் - शैवागम:

சைவ சமயம் சார்ந்த கபாலிகன் - कापाल:, कापालिक: पु

சைவ மதத்தினன் - शैव:

சைவ மதம் - शैवं, शैवमतं

சைனாப்பட்டு - चीनाम्शुकं

சொக்கட்டான் - ग्लह:, अपहार: पु

சொக்கட்டான் ஆடுகிறான் – क्रीडति क्रि

சொக்கட்டான் ஆடுதல் - आकर्ष: पु, द्यूत:, द्यूतम् न

சொக்கட்டான் ஆடுபவன் - हरिक: पु

சொக்கட்டான் காய் - ग्लह: पु

சொக்கட்டான் காய் நகர்த்துவது - परिणाय:

சொக்கட்டான் காய் வைக்கும் பெட்டி - परिणाय:

சொக்கட்டான் பலகை (சதுரங்கப் பலகை) - चित्रफलकं, अष्टापदं

சொக்கட்டான் போன்ற ஒரு சூதாட்டம் - चतुरङ्गम्, चर्मपट्टिका क्रीडा

சொக்காய் (சட்டை) - चोल:, कूर्पासक:, अङ्गिका स्त्री, अवगुण्ठनम्, कञ्चुक:, शट:, शाटी, शाटक:, कटिवस्त्रम्

சொட்டிய - स्कन्न

சொட்டு - द्रप्स: पु, विन्दु: पु

சொட்டு சொட்டாக வெளியாக - क्रि मंदमंदं स्त्रु प, परिस्त्रु प, कणश: क्षर् प, कणश: : स्पंद् आ, शनै: शनै: क्षर् प, शनै: शनै: स्पंद् आ

சொட்டு சொட்டாக வெளியாகிறது - क्रि श्च्योतति

சொட்டுகிறது - क्रि स्यन्दते

சொட்டுகிறான் - क्रि स्कन्दति

சொட்டுதல் - क्षरणं, स्त्रवणं, गलनं, द्रव: पु, स्यंदनं, निस्यंद:, च्युति: स्त्री, निष्यन्द:, विष्यन्द:, स्त्रवणम्, स्त्रव:

சொட்டை – इन्द्रलप्तं न

சொட்டையான (வழுக்கை) – विकेश वि, अकेश वि, मुंड वि, खलति वि

சொடுக்குதல் (கைகளை) - आस्फोट: पु, आस्फोटनं न

சொடுக்குதல் (விரல்களை) - आच्छोटनं न

சொத்தில் பங்குரிமை - दायाद्यम् न

சொத்தின் சேமிப்பு - आगम: पु

சொத்து - ऋक्थं न, काञ्चनम् न, ग्रन्थ:, निधानम् न, विभव:, संपत्ति: स्त्री, स्वत्वं

சொத்து உரிமை இல்லாமை - पैतृकरिक्थच्छेद:, पैतृकरिक्थलोप:

சொத்து உரிமை இழந்த - अनधिकार, पैतृकंधनहीन

சொத்து உரிமையை அகற்ற - क्रि प्रैतृकंधनंलुप्, रिक्थाधिकाराद् भ्रंश्

சொத்து தானம் - निबंध:

சொத்து நன்கொடை - वृत्तिदानं, शुल्कदानं, प्रतिष्ठा, अग्रहारदानं

சொத்துச் சண்டை - अपरव: पु

சொத்துரிமை - दाय: पु, स्वाम्यम् न, स्वामिता स्त्री

சொத்துரிமைப் பங்காளி - दायबन्धु: पु

சொத்துரிமைப் பங்கு - दायभाग: पु

சொத்துரிமைப் பத்திரம் - आगम:

சொத்துரிமையை ஏற்கிற - रिक्थहारिन् वि

சொத்தை நன்கொடையாக எழுதிக் கொடுக்க - क्रि वृत्तिंदा 3 उ, प्रतिष्ठा (प्रतिष्ठापयति)

சொந்த உரிமை - स्वाम्यम्

சொந்த மனைவியின் மகன் - औरस:

சொந்த யோஜனைப்படி - स्वच्छंदं, स्वेच्छया, स्वरुच्या, कामत

சொந்தக்கண்டுபிடிப்பு - स्वकपोलकल्पितं

சொந்தக்காரரின் சாவுக்குப் பின் செய்யப்படும் சுத்திகரிப்பு - शौचम्

சொந்தக்காரன் - स्वामिन् पु

சொந்தக் கையெழுத்து - स्वाक्षरम्

சொந்தம் - पिंडसंबंध: पु

சொம்பு - कलशं, शृङ्गं, करक: पु

சொரசொரப்பான (முறடான) - स्थूल, घन, नीरंध्र, अविरल, निबिडस्यूत

சொரசொரப்பான - प्रखर

சொரி சிரங்கு பிடித்தவன் - कच्छुर:

சொரி - खर्जू:, कण्डू:, कंडूति: स्त्री, कच्छु:, कच्छू: स्त्री

சொரிகிறான் - कषति क्रि, कंडूयति, कंडूयते क्रि

சொரிதல் - कंडूयनं न

சொரிவதற்கான சலாகை - कंदूयनी स्त्री

சொருக்கில் வைக்கும் திருகு சாமந்திப்பூ - वालपाश्या, पारितथ्या

சொருக்கு முடி (தலை மயிரின் முடி) - धम्मिल्ल:, कवरी, केशवेश:

சொல் - वचनं, वच:, अभिधा स्त्री, ईरितं न, गी:, गिरा स्त्री, वचस् न, वाक: पु, वाच् (वाक्) स्त्री, गौ:, वाणी स्त्री, शब्द: पु, व्याहृति: स्त्री, सरस्वती स्त्री, वार्ता, भाषणं, वाचक:, पणितं, लपितं, वाक्यं, वाचकम्, उक्ति: स्त्री, गो स्त्री, पदम् न, भारती स्त्री

சொல் அலங்காரம் - शब्दालङ्कार: पु, श्लेष: पु

சொல் இலக்கணம் அறிந்தவன் - नैदान: पु, नैरुक्त:, नैरुक्तिक: पु

சொல் இனிமை - वाक्विलास: पु

சொல் குழறுதல் - गद्गद:

சொல் சம்பந்தமான - शाब्द वि, शाब्दिक वि

சொல் திரிபு - वर्णनं

சொல் நயம் - भाषा, वाणी, वाक्सरणि स्त्री, वचोविन्यास:

சொல் மயம் - वाङ्मयं

சொல் மனதில் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப் பட்டது ஆனால் செயலில் பிரதிபலிக்கவில்லை - पश्यन्ती

சொல் மாத்திரத்தில் ப்ரபு - शब्दपति: पु

சொல் மாரி - वाग्वर्ष:

சொல்கிறான் - क्रि क्षी 9 प, क्षीणाति, क्षिणाति, क्षी 4 आ, क्षीयते, क्रि कथ् 10 प, आ, कथयति – ते, प्रेरयति, प्रेरयते क्रि, गदति, वदति, चष्टे, ब्रवीति, वेदयते, कीर्तयते, गृणाति, उपनमति क्रि, कीर्तयति, भणति, ख्याति, क्रि विद् 10 आ – वेदयते, क्रि कृत् 10 प आ – कीर्तयति – ते, क्रि भण् प, भणति, क्रि ख्या 2 प ख्याति

சொல்பவன் - वदन् (त)

சொல்ல - क्रि प्रवद् प, प्रस्तु 2 उ, ब्रू 2 उ, भण् प, मन्त्र् 10 उ, वच् 2 प, वद् प, विद् 10 उ, विलप् प, विवृ 5 9 उ, व्यपदिश् 6 प, व्याख्या 2 प, व्याहृ प, शंस् प, शाल् आ, शास् 2 प, सङ्कृत् 10 उ, आख्या 2 प, अभिधा 3 उ, अभियुज् 7 आ, आचक्ष 2 आ, आशंस् आ, ईर् 10 उ, उदीर् 2 आ, उदाहृ प, कथ् 10 उ, कृत् 10 उ, ख्या 2 प, गद् प, गृ 9 प, गै प, चक्ष् 2 आ, निगद् प, निविद् 2 प, परिचक्ष् 2 आ, प्रख्या 2 प, प्रचक्ष् 2 आ, क्रि कथ् 10, आख्या 2 प, नि-आ-विद्, शंस् प, अभि-धा 3 उ, उदीर् – उच्चर्, कृत् 10, वच् 2 प, निर्दिश् 6 प, स्मृ प

சொல்ல ஆசை - विवक्षा

சொல்ல ஆரம்பித்தல் - उदाहरणं न

சொல்ல நினைத்ததைச் செவ்வையாகச் சொல்கிறவன் - वाचोयुक्तिपटु:, वाग्मी, वाग्मिन्, वावदूक:, अतिवक्तरि

சொல்ல முடியாத - अनभ्युद्य, अकथ्य

சொல்ல வேண்டிய - वाच्य

சொல்ல, சொல்வதற்கு - कथयितुम्, गदितुम्, वक्तुं, ख्यातुम्

சொல்லக்கூடாத குறை - अवद्यम् न

சொல்லத்தக்க - वचनीय, वक्तव्य, वद्य, वाच्य, आख्येय

சொல்லத்தக்கது - वचनीयं

சொல்லத்தக்கவை - वक्तव्य:

சொல்லத்தகாத - अवर्णनीय, अवचनीय, अवाच्य

சொல்லத்தகாத சொல் (கெட்ட வார்த்தை) - अनक्षरं, अवाच्यम्

சொல்லத்தகுந்தது - जप्यं

சொல்லப்பட்ட - व्याहृत, प्रोक्त, उद्दिष्ट, उक्त, कथित, उदित, आख्यात, चरित, भाषित, व्याख्यात, शंसित, समाख्यात, समुदित वि, श्रावित वि, सन्दिष्ट, ईरित वि, जल्पित, गदित, वाचिक, अभिहित, निरुक्त, ख्यात

சொல்லப்பட்டது - उक्तम्, भाषितं, उदितं, जल्पितं, आख्यातं, अभिहितं, लपितम्, गदितं, प्रोक्तं, श्रावितं, समुदितं, आलपितं, कथितम्, ख्यातम्, गदित:

சொல்லப்பட்டவள் - कथिता, गदिता, उक्ता, ख्याता

சொல்லப்பட்டவன் - कथित:, गदित:, उक्त:, ख्यात:

சொல்லப்பட வேண்டும் - कथयितव्यम्, कथनीयम्, गदितव्यम्, गदनीयम्, वक्तव्यम्, वचनीयम्, ख्यातव्यम्, ख्यानीयम्

சொல்லப்படாத - अनिर्वचनीय

சொல்லப்படாதது - अकथितं, अगदितं

சொல்லப்படுகிற - श्राव्यमाणां

சொல்லப்படுகிறான் - कथ्यते, गद्यते, उच्यते, ख्यायते

சொல்லப்போகிற விஷயத்தைச் சுருக்கமாய் ஆரம்பத்திலேயே சொல்வது - उपोद्घात:

சொல்லம்பு - वाग्वाण:

சொல்லவொண்ணாத – अतिगव वि

சொல்லாத வார்த்தை - अनुक्तं

சொல்லால் குறிப்பிடப் பெறுகின்ற - अभिधेय वि

சொல்லால் கூறப்பட்ட - वाचिक वि

சொல்லால் விளைவது - वाचिक:

சொல்லிக் கிளம்புகிறான் - क्रि प्रच्छ् (पृच्छ) + आ, 6 प आपृच्छति

சொல்லிக் கொடுக்கப்பட்ட - ज्ञपित, ज्ञप्त वि

சொல்லிக் கொடுக்கிறான் - प्रदानं करोति क्रि

சொல்லிக் கொண்டு - कथयन्, कथयन्ती, गदन्, गदन्ती, ब्रुवन्, ब्रुवन्ती, ख्यास्यन्, ख्यास्यन्ती

சொல்லியனுப்பும் வார்த்தை - सन्देशवाक् (च), सन्देशवाच्, वाचिकम्

சொல்லிலக்கணம் - शब्दसाधनम् न, शब्द व्युत्पत्ति विद्या, व्युत्पादनं, व्युत्पत्ति स्त्री, शब्दव्युत्पत्तिकुशल:, व्युत्पत्तिशास्त्रम् न, प्रक्रिया

சொல்லிவிட்டு - कथयित्वा, संकथय्य, गदित्वा, निगद्य, उक्त्वा, प्रोच्य, ख्यात्वा, आख्याय

சொல்லின் உட்பொருள் - ध्वन:, ध्वनि: पु

சொல்லின் நேர் பொருளான - मूल, मुख्य, प्रकृत, अरूपक, मूलार्थक, मुख्यार्थक

சொல்லின் பொருள் - अर्थ: पु, पदार्थ:

சொல்லின் பொருளில் முழுமை இல்லாமை - आकाङ्क्षा स्त्री

சொல்லின் விரிவான உரை - पञ्जिका स्त्री

சொல்லின் பொருளை அறிதல் - शक्तिग्रह:

சொல்லின் பொருளை உணர்த்துகிற - शक्तिग्राहक वि

சொல்லுக்குச் சொல்லாக - अनुपदं अ, ம் = अनुस्वार: पु (குறிப்பு:- (.) இந்த அடையாளம் எந்த எழுத்தின் மீது போடப்படுகின்றதோ அந்த எழுத்துடன் 'ம்' என்னும் ஒலியைக் காட்டும். (உ- ம்) மம் = मं

சொல்லுக்குப் பின் வந்தால் சொல்லைப் பெருமைப் படுத்தும் - सिंह: (உ.ம்) உயர்ந்த ஆண்மகன் - पुरुपसिंह:

சொல்லுகிற - निवेदक वि, ब्रुव, ब्रुवाण, वद, वाचक, शंसिन् वि

சொல்லுகிறவன் - वक्तृ पु, वाचक: पु

சொல்லுகிறான் – क्रि ब्रवीति, ब्रूते, आह, वक्ति, शंसति

சொல்லுதல் - अभिधानं, आख्यानं, आशंसनं न, उच्चार:, उच्चारणं पु, उल्लेख: पु, उल्लेखनं न, कीर्तनम्, उपन्यास: पु, भाष्यम् न, वचनं, आचक्षणं, वाचनं, व्याख्या स्त्री, व्याख्यानं, निगाद:, निगद:, भाषणम् न, कथनं, व्याहरणम्, शंसनम् न, शंसा, सङ्कीर्तनं, सङ्कीर्तना, समुदाहरणम्, गद:, ख्यानं

சொல்லும் பொருளும் - वागर्थ: पु

சொல்லும் மனமும் - वाङ्मनसे

சொல்லுறுதி உள்ளவன் - एकवाक् (च)

சொல்வது - उच्चारणं

சொல்வன்மை - वाक्छक्ति:

சொல்வன்மையால் காயப்படுத்துதல் - वक्रोक्ति: स्त्री

சொள்ளு - लाला

சொற் பொருள் - अर्थ:

சொற்களடங்கிய – वाङ्मय वि

சொற்களால் கூறப்பட்ட - वाचनिक वि

சொற்களின் ஒற்றுமை (ஒரே சொல்லாக அமைதல்) - ऐकपद्यम् न

சொற்களின் சரியான அறிவுப் பொருளுக்காக - वागर्थप्रतिपत्तये

சொற்களின் தொகை - शब्द सङ्ग्रह: पु

சொற்களின் பகுதி விகுதிகள் - प्रत्ययं

சொற்களின் பொருளை அறிதல் - शाब्दबोध: पु

சொற்களைக் கலந்து தெளிவில்லாமல் எழுதுகிறான் - ग्रसते क्रि

சொற்களைப் பிரித்தல் - पदच्छेद: पु

சொற்களைப் பிரித்து விளக்குதல் - पदभञ्जनम् न

சொற்காலத்திற்குரிய இல்லாமை - सामयिकाभाव: पु

சொற்பகட்டு - वागाडम्बर: पु, वाग्जालम् न, शब्दाडम्बर: पु

சொற்ப காலத்திற்குரிய – सामयिक वि

சொற்பம் – स्वल्पम् न

சொற்பொழிவாளர் - पाठक:, अध्यापक:, शिक्षक:, उपदेशक:, प्रवक्तृ पु, वादिन् पु, व्याख्यातृ पु

சொற்பொழிவாற்ற - क्रि संवद् प, संभाष् आ, समालप् प

சொற்பொழிவு - संवाद:, संभाषणं, प्रपाठ:, अभिभाषणं, शासनं, संकथा, संलाप:, व्याख्यानं, प्रवचनं, उपन्यासम्, उपन्यास:, आध्यापनं, प्रसङ्ग:, गोष्टि:, गोष्टी स्त्री, जल्प:, वाचस्पत्यम् न, सम्वोधनम्

சொற்பொழிவு ஆற்றுதல் (பகட்டாக) - सालंकारं वचनं, शब्द पांडित्यं, वाक्चातुर्यं, वाक्तांडवं

சொற்போர் - विवाद:, जल्प:

சொற்போரில் வென்றவன் - जितवाद:

சொற்றொடர் - वाक्प्रचार: पु, वाक्यम् न

சொற்றொடர் இலக்கணம் - कारकप्रक्रिया, वाक्यरचना विचार:

சொறசொறப்பான - रूक्ष वि

சொறி - दद्रु: स्त्री, सिध्मम् न, सिध्मन् न, सिध्मा स्त्री, सृकण्डु: स्त्री, विस्फोटम् न, खर्जू स्त्री

சொறிசிரங்கு - दद्रु: पु, खर्जु: स्त्री, खर्जू: स्त्री, पामन् पु, पामा स्त्री, कण्डु:, विसर्प:

சொறிதல் - उल्लेख:, कण्डू:, कण्डूति, कण्डूयनम्, निर्लेखनम्, कंडूया, खर्जु:, खर्जू: स्त्री

சொறிபிடித்தவன் - पामन:, कच्छुर:

சொறியுள்ள - सिध्मल वि, सिध्मवत् वि

சொன்ன சொல் தவறாத - अकल्यसंध वि

சொன்னதைக் கேட்பவன் - विधेय:, आश्रव:, विनयग्राहिन्, वचनेस्थित:

சொன்னதைத் திருப்பிச் சொல்லுதல் - अनुभाषणम्

சொன்னதையே திரும்பச் சொல்வது - पुनरुक्तं, पुनरुक्ति:

சொன்னபடி செய்கிற - वचनकारिन् वि

சொன்னபடி செய்கிறவன் - वचनेस्थित:, आश्रव:

சொன்னபடி செய்யத்தகுந்தவன் - वक्तव्य:

சொன்னபடி நடக்கிற - वचनेस्थित वि

சொன்னபடியே - यथोक्तम् न, यथोदित वि

சொன்னனதையே சொல்லும் தன்மை - पौनरुक्त्यं

சொன்னான் - क्रि आह, प्राह
(குறிப்பு: आह, प्राह ஆகிய இரண்டும் प्रथमपुरुष एकवचन த்தில் மட்டும் வரும்)-

சொஸ்த்தப்படுத்த - क्रि निष्कृ 8 उ

சொஸ்தம் அடைய - क्रि आरोग्यं लभ् आ, रोगाद् विमुच्

சோகத்தில் ஆழ்ந்த - शोकमग्न, अतिदु:खित:

சோகத்தினால் துன்பப்படுகிறவன் -विहस्त:, व्याकुल:

சோகம் - दु:खं, शोक:, मन्यु:, शुच्, हा अ, शुक्

சோகம் ததும்புகிற - करुण वि

சோகம், பயத்தினால் உண்டாகும் சத்த விகாரம் - काकु:

சோகமடைந்த - उत्कण्ठित वि

சோகமான – शोकात्मक वि

சோகமான நிலை - वैधुर्यम्

சோகரஸப்பாட்டு - शोकगानं, शोकगीति स्त्री, करुणरसंगीतं

சோகரஸம் - शोकरस:

சோகை - शोष:

சோடா உப்பு - वसुकं

சோண நதி - हिरण्यवाह:, शोण:

சோணா என்னும் ஆறு - शोणा

சோத்துப் பருக்கை - पुलाक:

சோதனை - प्रयोग:, परीक्षा, उपधा, प्रविचय: पु, परीक्षणम्, अनुभव:

சோதனை செய்தல் – परीक्षणम् न

சோதனைக் கட்டணம் - रूपं न

சோதனைக்காக - परीक्षणार्थं, अनुभूत्यर्थं

சோதனைக்கு ஆட்பட்ட - क्षोदक्षम

சோதனையில் தேர்கிற – क्षोदक्षम वि

சோதிக்க - क्रि प्रत्यवेक्ष आ, परीक्ष् आ

சோதிக்கப்பட்டது - निर्णिक्तं, शोधितं, मृष्टं, नि:शोध्यं, अनवस्करं

சோதிக்கிறான் - क्रि परीच्छति, क्रि लक्ष् 10 आ + सं – संलक्ष्यते, पश्यति

சோதிட நூல் - ज्योतिषं, ज्योतिषशास्त्रम्

சோதிடத்தில் இறைவனின் கருத்தை அறிகிற முறை - देवप्रश्न: पु

சோதிடம் - ज्योतिषं, नक्षत्र विद्या, दैवज्ञविद्या, गणितं

சோதிடம் கூறுபவன் - विप्रश्निका स्त्री

சோதிடர் - गणक:, दैवज्ञ:, ज्योतिपिक:, ग्रन्थिक:, कार्तांतिक:, दैवचिन्तक:, ज्ञानी न, ज्यौतिषिक:, मौहूर्तिक:, सांवत्सरिक:, कालज्ञ: पु, ग्रहचिन्तक:, ज्योतिष:, नैमित्तिक: पु, मौहूर्त:, सांवत्सर:, ज्ञानिन्

சோதித்தல் - परीक्षणम् न, प्रत्यवेक्षणं न, प्रत्यवेक्षा स्त्री, परीक्षा, निकष:

சோதித்துத் தடுத்தல் - गुप्ति: स्त्री

சோதித்துத் தீர்மானித்தல் - ऊहः

சோதித்துப் பார்க்க - क्रि उप पद् – प्रतिपद्, साध्, वि – भू, प्र-मा 3 आ 2 प, प्रमाणीकृ 8 उ, सत्याकृ8 उ, स्था (स्थापयति)

சோதித்துப் பார்க்கிறான் – क्रि परीक्षते

சோதித்துப் பார்த்தல் - अवलोकनं न

சோதிப்பவன் - परीक्षकः पु

சோப்பு - फेनकम्

சோபன பித்ரு பூஜை - नान्दी

சோபா (சாய்வு நாற்காலி) – स्रस्तरः

சோபிக்கச் செய்வது - विभासकं

சோபிப்பது - प्रदीकाशम्, भसत्, राजितः, राजितं, तरलं, परिलसितं

சோபிப்பவள் - शालिनी, आभा, लसिता

சோபிப்பவன் - विलासितः, शोभी न, विराजितः, शोभन् (त), लसन्

சோபை - धाम (न), रोचिः (स), ओजः (स), तेजः (स), उमा, भ्राजः (स), रुचिः, लवणा, द्युतिः, रुचा, कान्तिः, अभिख्या, अभिख्यानं, विलासः, मयूखः

சோபையளிப்பது - छविकरः

சோபையற்றது - विगतं, अरोकः

சோபையுள்ளது - सुपमं

சோம்பல் - आलस्यम् न, मन्दता स्त्री, मन्दत्वम् न, मन्दिमन् पु, मान्द्यम् न, सीद्यम्, तन्द्रिका, स्त्यानम्, तन्द्रिः, तन्द्री, कार्यद्वेषः, तन्द्रा, जाढ्यम्, प्रमीला, कार्यविमुखता, उदासीनता, जडता, तन्द्रालुता, जाड्यं, वितानं, अनुद्योगशीलता, जामिः

சோம்பலற்றவன் - क्रियावान्

சோம்பலற்றிருப்பவன் - वर्तिष्णुः

சோம்பலாயிருக்க - क्रि लुण्ट् प 10 उ, लुण्ठ् प

சோம்பலாயிருப்பது - अलसं

சோம்பலான - न्यञ्च् वि, मन्थर वि, मन्द वि, मन्दर वि, स्वैर वि, अलस, निर्व्यापार, निरुद्यम, अव्यवसाय

சோம்பலில்லாத - अतन्द्र वि

சோம்பலுள்ளவன் - मंदः, तुन्दः, परिमृजः, आलस्यः, शीतकः, अलसः, अनुष्णः

சோம்பலோடும் சிரிப்புடனும் சொல்லும் வார்த்தை - सोल्लुण्ठनं, सोत्प्रासम्

சோம்பித் திரிபவன் - स्वेच्छाचारिन्, परिभ्रमिन्, यथेच्छविहारिन्

சோம்புச் செடி - छत्रा, सालेयः पु

சோம்பேறி - अलसः, निरुद्योगः, आलस्यशीलः, आलस्यः, तंद्रालुः, निरुत्साहः, निर्व्यापारः, कालक्षेपकः, अनुष्णः, शीतकः, कार्यपुटः, मुखनिरीक्षकः, कुण्ठः, तन्तुपरिमृजः, वितानाः, अलसा, शठः, मन्थरः, जडः, अनुद्योगिन्, उद्योगविमुखः, अव्यवसायशीलः, जिह्मः
मन्दगतिः

சோம்பேறி மாடு - गडिः पु

சோம்பேறித்தனம் - आलस्यं, कार्यद्वेषः, कार्यविमुखता, उदासीनता, मान्द्यं, जाड्यम् न

சோம்பேறித்தனமாய் - मंदं मंदं, अलसवत्, जडवत्, जाड्येन अ, आलस्येन

சோம்பேறியான - अलस, तंद्रिल, जड, मंद, मंथर, तंद्रालु, मंदगति, अनुद्योगिन्, उद्योगविमुख, उद्योगविमुकी (स्त्री), शीतक, अव्यवसायशील, अनुष्ण, तुंदपरिमृज, कर्मविमुख, कार्यविमुख, कार्यपराङ्मुख, कर्मपराङ्मुख,कर्मद्वेषिन्, आलस्यशील, अनुद्योगशील, दीर्घसूत्र, दीर्घसूत्रिन् वि, शयालु वि, कलुष वि, अकर्मन् वि, अनर्थक

சோர்ந்த - तान्त वि, मन्थर वि

சோர்வடைகிறான் – खिद्यते, खिन्ते क्रि, ग्लायति क्रि

சோர்வடைதல் - अवसादः, ग्लानता

சோர்வடைந்த - सादित वि, क्लान्त, ग्लान, विषण्ण, सन्न वि

சோர்வடைய - क्रि अवसद् प, क्लम्, परिक्लम्, 4 प, परिम्लै, परिग्लै प, स्रंस् आ, गल्।प, शिथिलीभू प, क्षि – विशृ – खिद् – ध्वंस् आ, क्रि विषद् प, सद् प, सीदति

சோர்வடையாதவன் - महोद्यमः

சோர்வான - विश्लथ वि

சோர்வு - तन्द्रा, अवसादः, आयासः, मान्द्यम् न, कश्मलम् न, क्लमः, क्लान्तिः स्त्री, ग्लानिः स्त्री, तन्द्रिः स्त्री, तन्द्री स्त्री, नैराश्यम् न, प्रमीला, विस्रंसः, विस्रंसा स्त्री, वैकल्यम्, विषादः, उद्वेगः, म्लानि स्त्री

சோர புருஷன் - जारः, उपपतिः

சோழ நாடு - चोलः

சோழ மன்னன் - चोलः, चोलभूपः

சோழி - काकिनी, काकिणी, कपर्दिका, वराटकः, वराटः, वराटिका स्त्री, कपर्दः, काकणिका, चरः पु, श्वेता स्त्री, हिरणम्

சோளக்கொல்லைப் பொம்மை - पालिका

சோளம் - व्रीहिभेद:, कुन्तल:, ममुरा

சோற்றுண்டை - पिंडं, पिंड:

